THE SUDAR OLI
# சுடர் ஒளி
Registered as Newspaper
05.06.2020 வெள்ளிக்கிழமை



## இன்றிரவு சந்திர கிரகணம்

கொழும்பு, ஜூன் 5
2020 ஆம் ஆண்டுக்கான சந்திர கிரகணம் இலங்கை நேரப்படி இன்றிரவு 11.15 மணியளவில் ஆரம்பமாகி, நாளை அதிகாலை 2.34 மணியளவில் நிறைவடையும் என்று கொழும்பு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் சந்தன ஜயரட்ண தெரிவித்துள்ளார். சந்திர கிரகணத்தின் உச்சம் நள்ளிரவு 12.54 க்கு இடம்பெறும். கிரகணம் உச்சத்தில் இருக்கும்போது 90 சத விகித நிலவு பூமியால் மறைக்கப் 2

# இராணுவ ஆட்சியா? தேர்தலில் தெரியும்!!

### எதிரணியின் கருத்துக்கு அரசு பதில்



கொழும்பு, ஜூன் 5
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு இராணுவ ஆட்சிதான் நடத்துகின்றது என்றால் பொதுத்தேர்தலில் மக்கள் பதில் வழங்கட்டும். இப்படிக் கூறியுள்ளார் ராஜபக்ஷ அரசின் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல. 2

## தமிழ் அரசு கூடுகின்றது

யாழ்ப்பாணம், ஜூன் 5
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளைக்குழு கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறவுள்ளது. தற்போதைய நிலையில், ஞாயிறுக்கிழமை ஊரடங்கு உத்தரவு குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. ஞாயிற்றுக்கிழமை ஊரடங்கு உத்தரவு இல்லாத பட்சத்தில், கூட்டத்தினைன் ஞாயிறன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. (ஓ,5)

## சிமெந்து விலை அதிகரிக்கும்!

கொழும்பு, ஜூன் 6
சிமெந்து மீதான செஸ் வரியை அதிகரிக்கும் அரசின் தீர்மானத்தால் சிமெந்து பொதியின் விலை 150 ரூபாவால் அதிகரிக்கக்கூடும் என்று பாவனையாளர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் தெரிவித் 2



## சீனி 135/=

யாழ்ப்பாணம், ஜூன் 5
ஒரு கிலோ சீனி 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படும் தகவலில் உண்மையில்லை என்று மறுத்துள்ள யாழ்ப் பாண நகர வர்த்தகர்கள் 2

## சீசெல்ஸ் நாட்டில் இலங்கையருக்கு உயர்பதவி

கொழும்பு, ஜூன் 5
சீசெல்ஸ் நாட்டின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக இலங்கை நீதிபதியான அந்தனி பிரான்சிஸ் திஸ்ஸ பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை நீதிபதியான அந்தனி பிரான்சிஸ் திஸ்ஸ 2



## தங்கச் சவப்பெட்டியில் ஃபிளொயிட்டின் உடல்!

### அஞ்சலிகள் ஆரம்பம்

வொஷிங்டன், ஜூன் 5
அமெரிக்காவில் பொலிஸாரால் கொல்லப்பட்ட ஜோர்ஜ் ஃபிளொயிட்டின் உடல் தங்கமுலாம் பூசப்பட்ட சவப் பெட்டியில் வைக்கப்பட்டு, அஞ்சலிக்கப்பட்டு வருகின்றது. 3 நகரங்களில் ஆறு நாட்கள் ஜோர்ஜ் உடலுக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று , ஹூஸ்டனில் இறுதிச்சடங்கு இடம்பெறவுள்ளது என அறிவிக்கப் 2



### வடக்கு – கிழக்கு மட்டுமல்ல

## இலங்கைத் தீவு முழுவதும் தமிழரின் பூர்வீகத் தாயகமே

### ஞானசாரருக்கு ரவிகரன் பதிலடி

முல்லைத்தீவு, ஜூன் 5
பொதுபலசேனா அமைப்பினுடைய பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசாரதேரர் வரலாற்று அறிவில்லாது கருத்துக்களைத் தெரிவிப்பதை நிறுத்தவேண்டுமென வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். வடகிழக்கு தாயகப் பரப்பில் இராணுவம் நிலை கொண்டிருப்பதை எப்போதும் தாம் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார். வடக்கு - கிழக்கு தமிழர் 2

## வடக்கில் காற்றின் வேகம் அதிகரிக்கும்

கொழும்பு, ஜூன் 5
வடக்கு உட்பட சில மாகாணங்களில் காற்றின் வேகம் அதிகரிக்கும் என்று வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது. மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, நுவரெலியா 2

## புதினம் தெரியுமோ?

ஆரின்ர கண் பட்டதோ தெரியேல, சீரும் சிறப்புமா இருந்த யாழ்ப்பாணக் கச்சேரி இப்ப சிதைஞ்சு போச்சு. கட்டமைக்கப்பட்ட நிர்வாகம் இப்ப கவிழ்ந்து போச்சு. அமுல்பேபி அரசியல்வாதிக்கு கழுவுற வேலை மாத்திரம்தான் அங்க சிறப்பா நடக்குது. எவ்வளவு சொன்னாலும் சுரணை கெட்ட ஆக்கள் போல 'பெரியாக்கள்' இருந்தா இப்படித்தான் போகும்.

கொஞ்ச நாளைக்கு முந்தி, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் என்ற பதவிக்காக கிடைச்ச வாகனத்தை அந்த அரசியல்வாதி திருப்பி ஒப்படைக்கேல்ல என்ற செய்தி வந்தது. அந்தச் செய்திக்குரிய ஆதாரமா அனுப்பின கடிதமும் ஊடகங்களில போடப்பட்டது. இதைப் 2

